# ADM COURT, SANKARANKOVIL

**தேதி 08.07.2026**

**அசல் வழக்கு எண். 6/2013**

**வா.சா.1 (ராஜாதேவர்) மீண்டும் ஆஜர் சத்தியபிரமாணத்தின் பேரில் 1 முதல் 5 பிரதிவாதிகள் தரப்பில் குறுக்குவிசாரணை**

இவ்வழக்கில் நான் என்ன பரிகாரம் கோரி வழக்கு தாக்கல் செய்துள்ளேன் என்றால் எங்கள் கையிருப்பில் உள்ள எங்கள் இடத்தின் அனுபவத்தை பிரதிவாதிகள் இடையூறு செய்ததால் அவர்களுக்கு எதிராக இவ்வழக்கை தாக்கல் செய்துள்ளேன். வா.சா.ஆ.1 ஆவணத்தின் அசல் ஆவணம் யாரிடம் உள்ளது என்றால் கந்தசாமிதேவர் மற்றும் சுப்பையாத்தேவரிடம் உள்ளது. வா.சா.ஆ.1 ஆவணம் மூலம் எவ்வளவு இடம் கிரையம் பெறப்பட்டது என்றால் அது பற்றி என்னால் சொல்ல இயலாது. வா.சா.ஆ.1 ஆவணத்தில் பிராது தபசில் 2 ம் அயிட்ட சொத்தின் 6 சென்டில் தென்பக்கம் 4 சென்ட் கிரையம் கொடுக்கப்பட்டுள்ளதாக குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் அதுபற்றி எனக்கு தெரியாது. வா.சா.ஆ.1 ஆவணத்தில் சாமித்தேவருக்கு ஏற்கனவே பூர்வீகமாக பாத்தியப்பட்டதாக தெரிவிக்கப்பட்ட சொத்து எதுவும் அந்த கிரைய சொத்தின் மால்களாக காட்டப்படவில்லை என்றால் சரியல்ல.

2. எனது தாத்தா பெயர் சாமித்தேவர் என்றால் சரிதான். சாமித்தேவரின் தந்தை பெயர் என்னவென்றால் நாராயணத்தேவர். சுப்புத்தேவர் மகன் சாமித்தேவர் என்பவர் எனது தாத்தா அல்ல என்றால் அது பற்றி எனக்கு தெரியாது. வா.சா.ஆ.2 ஆவணத்திலும் எனது தாத்தாவிற்கு ஏற்கனவே பூர்வீகமாக பாத்தியப்பட்டதாக தெரிவிக்கப்பட்ட சொத்து எதுவும் அந்த கிரைய சொத்தின் மால்களாக காட்டப்படவில்லை என்றால் சரியல்ல. வா.சா.ஆ.3 ஆவணத்தில் கிரையம் பெற்ற நபரின் பெயராக நாராயணத்தேவர் மகன் சாமித்தேவர் என்றுதான் குறிப்பிடப்பட்டுள்ளது. வா.சா.ஆ.3 ஆவணத்தின் மூலம் 10 சென்ட் இடம்தான் கிரையம் பெறப்பட்டது என்றால் அதுபற்றி எனக்கு தெரியாது. வா.சா.ஆ.4 ஆவணத்தில் 19 சென்ட்தான் கிரையம் பெறப்பட்டது என்றால் அது பற்றி எனக்கு தெரியாது. வா.சா.ஆ.1 முதல் வா.சா.ஆ.4 வரையிலான ஆவணங்களின் அசல் தற்போது யாரிடம் உள்ளது என்று எனது பிராதிலும், நிரூபண உறுதிக்கூற்றிலும் நான் தெரிவிக்கவில்லை என்றால் சரியல்ல.

3. பிராது தபசில் 1ம் அயிட்ட சொத்தாக குறிப்பிடப்பட்டுள்ள சர்வே எண்.492/1 ல் 39 சென்டில் மேல்கடைசிக்கு அடுத்த கீழ்பக்கம் 27 சென்ட் எங்களுக்கு பாத்தியப்பட்டது என்று கூறியுள்ளோம் என்றால் சரிதான். வா.சா.ஆ.5 ஆவணத்தில் சர்வே எண்.492ல் எவ்வளவு விஸ்தீரணம் உடைய இடம் கிரையம் கொடுக்கப்பட்டுள்ளது என்றால் 19–1/4 சென்ட் விஸ்தீரணம் உடை இடம் கிரையம் கொடுக்கப்பட்டுள்ளது. மேற்கண்ட கியைரத்தை கந்தசாமித்தேவர், சுப்பையாத்தேவர் மற்றும் சுடலைமுத்துத்தேவர் ஆகியோர்கள் கிரையம் பெற்றார்கள் என்றால் சரிதான். மேற்கண்ட 3 நபர்களின் வாரிசுகள்தான் இவ்வழக்கின் பிரதிவாதிகள் என்றால் சரிதான்.

4. எனக்கு கணக்கு வழக்குகள் தெரியும் என்றால் சரிதான். சர்வே எண்.492/1ல் 39 சென்ட் இடம் மொத்தமாக உள்ளது என்றால் சரிதான். சர்வே எண்.492/1ல் உள்ள 39 சென்ட் இடத்தில் 19–1/4 சென்ட் இடம் கிரையம் கொடுக்கப்பட்டுவிட்டது என்றால் சரிதான். மேற்கண்ட கிரையம் கொடுக்கப்பட்ட சொத்தை தவிர்த்து தற்போது சர்வே எண்,492/1ல் மீதம் 19–3/4 சென்ட் இடம்தான் உள்ளது என்றால் சரியல்ல. அதைவிட கூடுதலாக இடம் உள்ளது. பிராது தபசில் 1ம் அயிட்ட சொத்திற்கான விஸ்தீரணமாக நான் எனது வழக்குரையில் குறிப்பிட்டுள்ள விபரம் தவறானது என்றால் சரியல்ல. வா.சா.ஆ.5ன் மூலம் கிரையம் பெற்ற சொத்து பிரதிவாதிகளின் அனுபவத்தில் இருந்து வருகிறது என்றால் சரிதான்.

5. பிராது தபசில் 1ம் அயிட்ட சொத்தில் குறிப்பிடப்பட்டுள்ள சர்வே எண்.492/1ல் 39 சென்டில் மேல்கடைசியில் எவ்வளவு விஸ்தீரணம் உடைய இடத்திற்கு கீழ்பக்கம் 27 சென்ட் இடம் உள்ளதாக கூறுகிறேன் என்றால் அதுபற்றி எனக்கு தெரியாது. பிராது தபசில் 1ம் அயிட்ட சொத்தில் குறிப்பிடப்பட்டுள்ள 27 சென்ட் இடத்திற்கு கீழ்ப்பக்கத்தில் சர்வே எண்.492/1ல் இடம் உள்ளதா என்றால் உள்ளது. அவ்வாறு கீழபக்கம் உள்ள இடத்தின் விஸ்தீரணத்தை என்னால் கூறஇயலுமா என்றால் இயலாது.

6. வா.சா.ஆ.6 ஆவணம் மூலம் 1ம் வாதி சுடலைமுத்துதேவருக்கு சர்வே எண்.492/1ல் கீழ்கடைசி 9–1/2 சென்ட் இடத்தை கிரையம் கொடுத்தார் என்றால் சரிதான். சர்வே எண்.492/1ல் உள்ள 39 சென்ட் இடத்தில் 28–3/4 சென்ட் இடம் கிரையம் கொடுக்கப்பட்டுவிட்டது என்றால் சரிதான். 39 சென்ட் இடத்தில் மேற்கண்ட

28–3/4 சென்ட் இடம் கிரையம் கொடுக்கப்பட்டதுபோக மீதம் 10–1/4 சென்ட்தான் இருக்க முடியும் என்றால் சரிதான். சர்வே எண்.492/1 ல் மீதம் உள்ள 10–1/4 சென்ட் மட்டும் எங்களுக்கு பாத்தியப்பட்டது என்று கூறுகிறேனா அல்லது பிராதில் தெரிவித்துள்ள 27 சென்ட் இடம் எங்களுக்கு பாத்தியப்பட்டது என்று கூறுகிறேனா என்றால் நான் தாக்கல் செய்துள்ள ஆவணங்களின் அடிப்படையில் எனக்கு நிலம் கிடைக்கத்தக்கது.

7. சர்வே எண்.494/3 ல் மொத்தம் எவ்வளவு விஸ்தீரணம் உடைய இடம் உள்ளது என்றால் சுமார் 8 சென்ட் விஸ்தீரணம் உடைய இடம் உள்ளது. சர்வே எண்.494/3 ல் மொத்தம் 8 சென்ட் விஸ்தீரணம் உடைய இடம் உள்ளது என்பதை காண்பிக்கும் ஆவணம் எதையும் நான் நீதிமன்றத்தில் தாக்கல் செய்யவில்லை என்றால் சரியல்ல. பிராது தபசில் 2 ம் அயிட்ட சொத்தாக குறிப்படப்பட்டுள்ள 5–1/4 சென்ட் இடம் சர்வே எண்.494/3 ல் நடுமையத்தில் தென்வடலாக உள்ளதா அல்லது கிழமேலாக உள்ளதா என்றால் தென்வடலாக உள்ளது. மேற்ண்ட 5–1/4 சென்ட் இடத்திற்கு கீழ்பக்கமும் மேல்ப்பக்கமும் சர்வே எண்.494/3 ல் எவ்வளவு விஸ்தீரணம் உடைய இடம் உள்ளது என்று கூறஇயலுமா என்றால் இயலாது. பிராது தபசில் 2 ம் அயிட்ட சொத்திற்கு மேற்குமாலாக காண்பிக்கப்பட்டுள்ள நிலம் சுடலைமுத்துதேவருக்கு எவ்வாறு பாத்தியப்பட்டது என்றால் அவர் 1 ம் வாதி சண்முகையாத்தேவரிடமிருந்து கிரையம் பெறப்பட்டதில் பாத்தியப்பட்டது. மேற்கண்ட இடத்திற்கு கிழக்கு மாலாக காண்பிக்கப்பட்டுள்ள நிலம் சுப்பன் வகையறாவுக்கு எவ்வாறு பாத்தியப்பட்டது என்றால் அது அவர்களது பூர்வீக இடம். பிராது தபசிலில் குறிப்பிடப்பட்டுள்ள 1,2 அயிட்ட சொத்துக்களின் அளவு மற்றும் மால் விபரங்களுக்குட்பட்டு பூமியில் அந்த சொத்துக்கள் தற்போது இருக்கவில்லை என்றால் சரியல்ல.

8. சர்வே எண்.494/3 ல் மொத்தம் 6 சென்ட் விஸ்தீரணம் உடைய இடம்தான் இருந்து வருகிறது என்றால் சரியல்ல. அதில் மொத்தம் 8 சென்ட் விஸ்தீரணம் உடைய இடம் உள்ளது. சர்வே எண்.494/3 ல் உள்ள மொத்த இடத்திலிருந்து தென்கடைசி 2–3/4 சென்ட் இடம் வா.சா.ஆ.5 ஆவணம் மூலம் கிரையம் கொடுக்கப்பட்டது என்றால் சரியல்ல. வா.சாஆ.5 ஆவணத்தில் எங்களுக்கு

பாத்தியப்பட்டதாக தெரிவித்து இடம் எதுவும் அந்த கிரையத்தின் மாலாக காண்பிக்கப்படவில்லை என்றால் சரியல்ல. சுப்பையாத்தேவர் அவர் கிரையம் பெற்ற சொத்தை 2ம் பிரதிவாதிக்கு 28.10.2011 தேதியிட்ட இரு கிரைய ஆவணங்கள் மூலம் எழுதிக்கொடுத்தார் என்றால் எழுதிக்கொடுத்தார். அதில் 1/2 சென்ட் இடத்தை எழுதிக்கொடுத்தார். மேற்கூறியவாறு 1/2 சென்ட் இடத்தை சுப்பையாத்தேவர் 2ம் பிரதிவாதிக்கு கிரையம் கொடுத்ததேதி அன்றே எனக்கு அந்த கிரையம் பற்றி தெரியும் என்றால் சரிதான். எனக்கு மேற்கண்ட கிரையம் தொடர்பாக உஎவ்வாறு விபரம் தெரியும் என்றால் அன்றையதினமே அவர்கள் என்னிடம் வந்து கூறினார்கள். அதன்பேரில் தெரியும். மேற்கண்ட கிரைய பத்திரத்தை அவர்கள் என்னிடம் காண்பித்தார்களா என்றால் இல்லை. சுப்பையாத்தேவர் 2ம் பிரதிவாதிக்கு பிறப்பித்துக் கொடுக்கப்பட்ட கிரைய ஆவணங்கள் பொறுத்து நான் வழக்கு தாக்கல் செய்த சமயத்தில் எனது வழக்கறிஞரிடம் கூறினேனா என்றால் இல்லை.

9. 5ம் பிரதிவாதிக்கு முருகையா என்பவர் 27.04.2012ம் தேதியில் கிரைய ஆவணம் ஒன்று பிறப்பித்துக் கொடுத்தார் என்றால் சரிதான். அந்த கிரைய ஆவணத்தில் எவ்வளவு இடம் கொடுக்கப்பட்டது என்று எனக்கு தெரியுமா என்றால் தெரியாது. கந்தசாமிதேவர் கிரையம் பெற்ற இடத்தில் வீடு கட்டியுள்ளார் என்றால் சரிதான். அந்த வீடு சர்வே எண்.492/1ல் மேல்ப்பக்கத்தில் உள்ளது என்றால் சரிதான். அந்த வீடு கட்டப்பட்டு சுமார் 50 வருடங்கள் இருக்குமா என்றால் சுமார் 20-25 வருடங்களுக்குள் இருக்கும். 1970ம் ஆண்டு மேற்கண்ட வீடு கட்டப்பட்டுவிட்டது என்றாலும், நான் அதை மறுத்து தற்போது வழக்கிற்காக பொய்சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

10. சர்வே எண்,492/1ல் உள்ள இடம் உட்பிரிவு செய்யப்பட்டு அவற்றிற்கு தனித்தனி பட்டா வழங்கப்பட்டிருக்கலாம் என்றால் வழங்கப்பட்டிருக்கலாம். சர்வே எண்.492/1ல் உள்ள இடம் பொறுத்து A முதல் F வரையிலான உட்பிரிவுகள் ஏற்படுத்தப்பட்டுள்ளது என்றால் தற்போது ஏற்படுத்தப்பட்டிருக்கலாம். மேற்கண்ட உட்பிரிவுகள் வழக்கு தாக்கல் செய்வதற்கு எவ்வளவு நாட்களுக்கு முன்பு ஏற்படுத்தப்பட்டது என்றால் எனக்கு தெரியாது. மேற்கண்ட உட்பிரிவுகள் பொறுத்த

விபரத்தை நீதிமன்றத்தில் கூறினால் அது வழக்கிற்கு பாதகமாகும் என்பதால் நான் அந்த விபரத்தை தெரிவிக்கவில்லை என்றால் சரியல்ல. சர்வே எண்.494/3 ல் உள்ள இடம் பொறுத்து A முதல் C வரையிலான உட்பிரிவு ஏற்பட்டுள்ளதா என்றால் ஏற்பட்டிருக்கலாம். அது பற்றி எனக்கு தெரியாது.

11. சர்வே எண்.494/3 பி ல் உள்ள இடத்தை 1ம் பிரதிவாதி 6ம் பிரதிவாதிக்கு 09.08.2010 தேதியிட்ட கிரைய ஆவணத்தின் மூலம் கிரையம் கொடுத்துவிட்டார் என்றால் 1ம் பிரதிவாதி 1/4 சென்ட் இடத்தை கிரையம் பெற்றுவிட்டு 2 சென்ட் இடத்தை கிரையம் கொடுத்துவிட்டார். அந்த இடத்தில் 6ம் பிரதிவாதி வீடு கட்டியுள்ளார் என்றால் சரிதான். இன்றிலிருந்து 2 மாதங்களுக்கு முன்பு அந்த வீடு கட்டினார். இவ்வழக்கின் நீதிமன்ற ஆணையர் பிராது தபசில் சொத்துக்களை பார்வையிட்டார் என்றால் சரிதான். அவர் 2014ம் ஆண்டு பிராது தபசில் சொத்துக்களை பார்வையிட்டதாக தெரிவித்து அறிக்கை தாக்கல் செய்தார் என்றால் தாக்கல் செய்திருக்கலாம். அந்த அறிக்கையில் சர்வே எண்.494/3 பி இடத்தில் ஓட்டு வீடு ஒன்றும், காரை வீடு ஒன்றும் இருந்ததாக குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் ஓட்டு வீடு இருந்தது. அதை பிரித்து புது வீடு கட்டப்பட்டது. அந்த ஓட்டுவீடு எப்போது கட்டப்பட்டது என்றால் ஆணையர் பார்வையிடுவதற்கு சுமார் 2 மாதங்களுக்கு முன்பு கட்டப்பட்டது. சர்வே எண்.494/3 பி ல் உள்ள இடமும் எனக்கு பாத்தியப்பட்டது என்று அதையும் சேர்த்துதான் நான் வழக்கு தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரிதான். சர்வே எண்.494/3 பில் உள்ள இடம் தற்போது 6ம் பிரதிவாதியின் அனுபவத்தில் இருந்து வருகிறது என்றால் அதில் 1 சென்ட் இடம் தான் அவரது அனுபவத்தில் இருந்து வருகிறது. வழக்கு தாக்கல் செய்யப்பட்ட சமயத்தில் அந்த இடம் காலியாக இருந்தது. அதன்பிறகு வீடு கட்டப்பட்டது. வழக்கு தாக்கல் செய்யப்படுவதற்கு முன்பு மேற்கண்ட இடத்தில் 6ம் பிரதிவாதி வீடு கட்டிவிட்டதாக எதிர்வழக்குரையில் தெரிவிக்கப்பட்டுள்ளது என்றாலும், இவ்வழக்கிற்காக வழக்கு தாக்கல் செய்யப்பட்டதற்கு பின்பு கட்டப்பட்டதாக பொய்யாக கூறுகிறேன் என்றால் சரியல்ல. பிராது தபசில் சொத்துக்கள் வழக்கு தாக்கல் செய்த சமயத்தில் எங்களது அனுபவத்தில் இருந்ததில்லை என்றாலும், அதனால் நாங்கள் அந்த சொத்துக்கள் பொறுத்து

கோரியுள்ள உறுத்துக்கட்டளை பரிகாரம் எங்களுங்ககு கிடைக்கத்தல்ல என்றால் சரியல்ல.

12. பிராது தபசில் 2ம் அயிட்ட சொத்தில் 6ம் பிரதிவாதி எங்களுக்கு தெரிய இடையூறுஏதுமின்றி வீடு கட்டி பல ஆண்டுகளாக அனுபவித்து வருகிறார் என்றாலும், அதனால் அதற்கு எதிராக சுவாதீனப்பரிகாரம் கோருவதற்கான காலவரம்பு முடிவுற்றது என்றாலும் சரியல்ல. பிராது தபசில் சொத்துக்கள் வாதிகளுக்கு எந்த காலத்தலும் எந்த உரிமையும் ஏற்பட்டதல்ல என்றாலும், அந்த சொத்துக்கள் எங்கள் அனுபவத்தில் இருந்து வரவில்லை என்றாலும், பொய்விபரங்கள் தெரிவத்து இவ்வழக்கு தாக்கல் செய்யப்பட்டுள்ளதால் பிரதிவாதிகளின் செலவுத்தொகையுடன் இவ்வழக்கு தள்ளுபடி செய்யப்படவேண்டியது என்றாலும் சரியல்ல.

**மறுவிசாரணை இல்லை.**